# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | வரலாறு – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி-I

- **சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. இலக்கிய மூலாதாரமாகிய தீபவம்சம் எத்தனையாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது?
1. கி.பி 4ம் நூற்றாண்டு 2.கி.பி 5ம் நூற்றாண்டு 3.கி.பி 3ம் நூற்றாண்டு 4.கி.பி 6ம் நூற்றாண்டு

02. கீழைத்தேசங்களின் தானியக்களஞ்சியம் என முற்காலத்தில் அழைக்கப்பட்ட நாடு?
1. இலங்கை 2. இந்தியா 3. பாகிஸ்தான் 4. இந்தோனேசியா

03. நெற்செய்கையானது முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட நாடு?
1. சீனா 2. இலங்கை 3. அமெரிக்கா 4. இந்தியா

04. மொசப்பத்தேமியா என்பதன் கருத்து
1. இரு நதிகளைக் குறிக்கின்றது
2. பள்ளத்தாக்கை குறிக்கின்றது
3. இரு நதிகளுக்கிடையே அமைந்துள்ள நாடு என்பதாகும்
4. நாகரிகத்தின் வளர்ச்சியைக் குறிக்கின்றது

05. கற்காலத்தின் களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள் செய்யப்பட்ட ஆண்டு?
1. கி.மு.3000 2. கி.மு.2000 3. கி.மு. 1000 4. கி.மு.2500

06. ஆபிரிக்காவில் வாழ்வோரின் முகங்கள் சீனாவில் வாழ்வோரின் முகங்களைவிட வித்தியாசமானவையாகும் இவ்விரு இனங்கள் முறையே ?
1. நீக்ரொயிட், மொங்கலொய்ட் 2. நீக்ரொயிட்,ஒஸ்ரிலொயிட்
3. மொங்கலொய்ட்,கொக்கசொய்ட் 4. ஒஸ்ரிலொயிட், கொக்கசொய்ட்

07. மனிதன் முதன் முதல் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கண்டுபிடிக்கப்பட்ட இடம்?
1. அமெரிக்கா 2. இஸ்ரவேல் 3. இலங்கை 4. சீனா

08. புதிய கற்காலத்தில் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று?
1. விவசாயம் செய்யப் பழகிக் கொண்டமை
2. மனிதன் வேட்டையாடி உணவைச் சேகரித்தமை
3. இறந்தவர்களின் எலும்புகள் மீது வர்ணம் பூசியமை
4.கற்களைக் கொண்டு உருவம் அமைத்தமை

09. விஜயனும் அவனது குழுவினரும் இலங்கையில் வந்து இறங்கிய இடம் எது?
1. அநுராதகம 2. உருவெலகம 3. தம்பபன்னி 4. மாகம

10. அநுராதபுரத்தை திட்டமிட்டு தலைநகரமாக்கிய மன்னன் ?
1. பண்டுகாபயன் 2. தேவநம்பியதீசன் 3. துட்டகைமுனு 4. எல்லாளன்

LMDMC

11. தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலத்தில் இந்தியப்பேரரசனாக விளங்கியவன்?
1. அசோகன் 2. துக்ளக் 3. அக்பர் 4. கலிங்கன்

12. துட்டகைமுனு மன்னனால் கட்டுவித்த விகாரைகள் எத்தனை?
1. 100 2. 98 3. 99 4. 90

13. கலாஓயா, மல்வத்துஓயா போன்ற நதிகளின் பழைய பெயர்கள் முறையே.
1. கோணநதி,கதம்பநதி 2. கோணநதி,ஜஜ்ஜிரநதி
3. வனவாகினிநதி,கதம்பநதி 4. கதம்பநதி,கல்யாணிநதி

14. இதுதான் எனது செல்வம் என்று தமது பிள்ளைகளுக்கு கலாவாவியின் தண்ணீரை அள்ளிக்காட்டிய அரசன்?
1. தாதுசேனன் 2. மகாசேனன் 3. வசபன் 4. பண்டுகாபயன்

15. வல்லிபுர பொற்சாசனத்தை பொறித்த மன்னன் ?
1. வசபன் 2. 2ம் அக்போ 3. தாதுசேனன் 4. துட்டகைமுனு

16. புராதன காலத்தில் மொசப்பத்தேமியா என்று அழைக்கப்பட்ட நாடு?,
1.ஈரான் 2. ஈராக் 3. எகிப்து 4.சீனா

17. அனுராதபுரத்தை 44ஆண்டுகள் நீதி தவறாமல் ஆட்சி புரிந்த மன்னன்?
1. மகாசேனன் 2. துட்டகைமுனு 3. எல்லாளன் 4. பண்டுகாபயன்

18. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையை வந்தடைந்த முதலாவது ஆரிய இனக்குழுவின் தலைவன்?
1. அனுராத 2. விஜயன் 3. சிங்கபாகு 4. உருவெல

19. வெள்ளரசு மரக்கிளையை கொண்டு வந்த பிக்குனி சங்கமித்தை வந்திறங்கிய இடம்?
1. ஜம்புகோளபட்டினம் 2. தம்பபன்னி 3. கோகர்ண 4. அநுராதகம

20. அபயகிரி விகாரையை கட்டவித்த மன்னன்?
1. வலகம்பா 2. துட்டகைமுனு 3. பண்டுகாபயன் 4. வசபன்

(20×2= 40 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி-II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட எவையேனும் 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) உலகப்புறவுருவப்படமொன்றில் பின்வருவனவற்றைக் குறித்துக் பெயரிக.
1. சீனா 2.எகிப்து 3. இலங்கை
4. அவுஸ்ரேலியா 5.இந்தியா 6. மொசப்பத்தேமியா நாகரிகம்

(6 ×1 =6 புள்ளிகள்)

(ஆ) இலங்கைப்புறவுருவப்படமொன்றில் பின்வருவனவற்றைக் குறித்துக் காட்டுக.
1.மன்னார் 2. மல்வத்து ஓயா 3.ஜம்புகோளப்பட்டிணம்
4.தம்பபன்னி 5.அனுராதபுரம் 6. திருகோணமலை

(6x1=6 புள்ளிகள்)

(இ) 1. அருகிலுள்ள படம் குறிப்பது யாது?
2. எந்த நாகரீகத்திற்குரியதாகும்?
3. இது எந்த நாட்டில் காணப்படுகின்றது?
4. இவற்றினுடைய சிறப்பம்சம் யாது?

(4 ×2= 8 புள்ளிகள்)



02. (அ) வரலாறு என்றால் என்ன? (3 புள்ளிகள்)
(ஆ) வரலாற்றைக் கற்பதனால் பெறும் பயன்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(இ) வரலாற்றுக் காலத்தை அளவிடும் முறைகளுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03. (அ) சிந்து நதி நாகரிகத்தில் காணப்பட்ட நகரங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
(ஆ) மொசப்பத்தேமியா நாகரிகத்தில் காணப்பட்ட 3 சமூகப்பிரிவுகள் எவை?(3 புள்ளிகள்)
(இ) எகிப்திய பிரமிட்டுகள் பற்றி இரு பண்புகளை எழுதுக. (4 புள்ளிகள்)

04. (அ) விஜயன் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன் இங்கிருந்த இரு மக்கள் குழுவினர் யாவர்? (3 புள்ளிகள்)
(ஆ) விஜயனுடன் வருகை தந்த குழுவினர் முதன் முதலில் எந்த நதிக்கரைகளை அண்டியதாக குடியேறினர்? (3 புள்ளிகள்)
(இ) புதிதாக கற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

05 (அ) மகாசேனன் மன்னனால் அமைக்கப்பட்ட தூபிகள் இரண்டைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(ஆ) தாதுசேன மன்னனால் நீர்ப்பாசனத்துக்கு ஆற்றப்பட்ட சேவைகள் 3 தருக. (3 புள்ளிகள்)
(இ) நிர்வாகத்தை இலகுவாக்கும் பொருட்டு வசபமன்னனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

06. (அ) துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைகள் இரண்டு தருக. (3 புள்ளிகள்)
(ஆ) தேவநம்பிய தீச மன்னனின் பௌத்த சமய சேவைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(இ) பண்டுகாபயன் அனுராதபுரத்தை நிர்மாணித்த விதம் பற்றி குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

LMDMUnit

(அ)



(ஆ)

